Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

MONDAY, JULY 15, 2024

திங்கட்கிழமை ஜூலை 15, 2024 | ஒளி: 10 கதிர்: 294 | பக்கம்: நகரப்பதிப்பு★ FREE



# ஜனாதிபதி கண்டனம்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் படுகொலை முயற்சி தொடர்பில் தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி தற்போது நலமாக இருப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியலில் இலங்கையர்களும் இவ்வாறான வன்முறைகளால் சூழப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் சட்டங்களை அனைவரும் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொண்டார். டொனால்ட் ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து விடுத்துள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பென்சில்வேனியாவின் பட்லரில் சனிக்கிழமையன்று (13) நடந்த பேரணியில் மேடையை நோக்கி துப்பாக்கிதாரி துப்பாக்கியால் சுட்டதில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் காதில் சுடப்பட்டார் -



தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு:

# மயிரிழையில் தப்பினார் ட்ரம்ப்

**காதில் காயம்: துப்பாக்கித்தாரி சுட்டுக்கொலை**



எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தொடர்பிலான பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன. சர்வதேச நாடுகள் அந்தத் தேர்தலை அவதானித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில், குடியரசு கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அதில், அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள பட்லர் நகரில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் சனிக்கிழமையன்று (13) உரையாற்றிக்கொண்டிருந்த போதே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இதில் ட்ரம்பிற்கு காது பகுதியில் காயம் ஏற்பட்டது. அதனையடுத்து விரைந்து செயற்பட்ட பாதுகாவலர்கள் மேடையில் இருந்து புடை சூழ ட்ரம்பை வெளியேறினார்.

துப்பாக்கிச் சூடு தாக்குதலுக்கு ஆளான டிரம்ப் உள்ளூரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகின்றார். அவர், நலமுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மீது பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் அவர் உயிரிழந்தார். டிரம்ப் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் குறித்து அமெரிக்காவின் எப்.பி.ஐ. பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையே, 20 வயதான தாமஸ் மேத்யூ குரூக்ஸ் என்ற இளைஞர் டொனால்டு ட்ரம்பை துப்பாக்கியால் சுட்டுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. படுகொலை முயற்சிக்கான காரணத்தைக் கண்டறிய அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

துப்பாக்கிச் சூடு நடத்திய தாமஸ் மேத்யூ குரூக்ஸ் பென்சல்வேனியாவில் வசித்து வந்து இருக்கிறார். இவரைப் பற்றிய மேலும் விவரங்கள் கிடைத்தால் உடனடியாக தருமாறு எப்.பி.ஐ பொலிஸார் அமெரிக்க மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஏ.ஆர். ரக அசால்ட் ரைபிளை துப்பாக்கிச் சூடு நடத்த அந்த இளைஞர் பயன்படுத்தியிருக்கிறார். பிரசார கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு அருகே உள்ள கட்டிடத்தின் மேற்கூரையில் நின்று டொனால்ட் ட்ரம்பை சுட்டுள்ளார். அந்த இளைஞன், பலமுறை துப்பாக்கியால் சுட்டுத் தாக்குதல் நடத்தியிருக்கிறார். எனினும், அதிர்ஷ்டவசமாக இந்த தாக்குதலில் இருந்து டொனால்டு ட்ரம்ப் உயிர் தப்பியுள்ளார்.



# ஜூலைக்குள் தேர்தல் திகதி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி இம்மாத இறுதிக்குள் தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முதன்முறையாக, 2023 ஆம் ஆண்டின் தேர்தல் செலவுச் சட்டத்தின்படி, வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் செலவை அறிவிக்க வேண்டும்.

கடந்த ஒத்திவைக்கப்பட்ட தேர்தலில் பயன்படுத்தப்படாத விதிமுறைகள், பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கும் நெறிமுறையற்ற நிதி சேகரிப்பு நடைமுறைகளைக் குறைப்பதற்கும் இம்முறை முழுமையாக அமுல்படுத்தப்படும்.

இந்த ஆண்டு செப்டம்பர் 16 முதல் ஒக்டோபர் 17 வரை தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் ஆணையத்தின் தலைவர் ரத்நாயக்க, அரசாங்க அச்சகர், பொலிஸ் மா அதிபர், போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினர் தேர்தலுக்குத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

# யுவதியின் தலை முடியை கத்தரித்த மௌலவி கைது

ஷேன் செனவிரத்ன

பேருந்தில் பயணித்த 27 வயதுடைய யுவதியின் தலை முடியை அரைவாசிக்கு மேல் கத்தரித்ததாக கூறப்படும் முருதலாவ பிரதேசத்தை சேர்ந்த மௌலவி என்று அறியப்பட்ட நபர் ஒருவரை கண்டி தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# சஜித்தின் பாதுகாப்பை பலப்படுத்த கோரிக்கை



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சி வேட்பாளரான குடியரசு கட்சி வேட்பாளரும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டை அனுமதிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

டிரம்ப் மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஜனநாயக ரீதியான தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் அரசியலையே நாம் முன்னெடுக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

## அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம்

# ஜூலையில் 24% மாக, உயர்ந்துள்ளது

நாட்டின் போக்கை பற்றி நம்பிக்கையுடன் சிந்திக்கும் மக்களின் எண்ணிக்கை 2023 ஜூன் இல் இருந்ததை விட அதிகமாக உள்ளது என வெரிட்டேரிசர்ச்சின் 2024 ஜூலைக்குரிய 'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பின் முடிவுகள் கூறுகின்றன ( FULL STORY P3)

# பிரதிவாதியை விடுவித்த மோசடியாளர் கைது

நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கு ஒன்றின் பிரதிவாதியைச் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# வடக்கு அரச ஊழியர்களுக்கு பிரதமர் தினேஷ் பாராட்டு



வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபடாது, மக்களுக்காக பணியாற்றி வட பகுதியைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கு தனது பாராட்டை தெரிவித்துக்கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்தன, சமுதாயத்தை முன்னேற்றப் பாடுபட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# தமிழரசுக் கட்சி உயிர்போடு இருக்கிறது



இலங்கை தமிழரசுக் கட்சி உயிர்ப்போடு இருப்பதுடன் ஓர் ஆக்கப்பூர்வமான பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பயணிக்கிறது. எதிர்வரும் எந்த தேர்தலிலும் கட்சி போட்டியிடும். மக்களுக்கான தனது செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்று

தொடர்ச்சி P2

# அனுரவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

பாறுக் ஷிஹான்தே

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க எம்.பி. பங்கேற்கின்ற கூட்டங்களில் நவீன ரக சி.சி.ரி.வி கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக அவர் கலந்து கொள்கின்ற கூட்டங்களில் சோலர் பொருத்தப்பட்ட சி.சி.ரி.வி கமரா மற்றும் இதர நவீன தன்னியக்க சி.சி.ரி.வி கமெராக்கள் பல ஆங்காங்கே பொருத்தப்பட்டு கூட்டங்களுக்கு வருபவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.




அம்பாறை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (12) காரைதீவு மற்றும் சம்மாந்துறை பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி கூட்ட மேடைகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இவ்வாறான கமெராக்கள் பல பொருத்தப்பட்டு

தொடர்ச்சி P2



# தாய்லாந்துக்கு இலவச விசா

இலங்கை உட்பட 93 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இருந்து வரும் பயணிகளுக்கு தாய்லாந்தில் ஜூலை 15ஆம் திகதி முதல் விசா இன்றி நுழைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையர்கள் விசா பெறாமல் தாய்லாந்துக்குச் செல்வது இதுவே முதன்முறை. தாய்லாந்து குடிமக்கள்,

தொடர்ச்சி P2

# "குத்தகை அடிப்படையில் மீன்பிடிக்க அனுமதி தேவை"

## மத்திய அமைச்சரிடம் தமிழக மீனவர்கள் கோரிக்கை

"இந்திய, இலங்கை அரசாங்கங்கள் பேச்சுவார்த்தை நடத்தி கச்சத்தீவு பகுதியில் குத்தகை அடிப்படையில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்" என மத்திய மீன்வளத்துறை அமைச்சரிடம் விசைப்படகு மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மதுரையில் நடைபெற்ற தேசிய மீன் விவசாயிகள் கருத்தரங்கில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் பங்கேற்றார். அதன்பின் இராமேஸ்வரம் வந்த மத்திய மீன்வளத்துறை அமைச்சர், இராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து தனுஷ்கோடி சென்று புயலால் அழிந்த நினைவுச் சின்னங்களையும், அரிச்சல் முனை கடற்கரைக்குச் சென்று பார்வையிட்டார்.

அதன்பின் இராமேஸ்வரம் தனியார் தங்கும் விடுதியில் மத்திய அமைச்சரை, பாரம்பரிய இந்திய மீனவர் நலச்சங்க நிர்வாகிகள் சேசுராஜா, எமரிட், சகாயம் உள்ளிட்ட மீனவ சங்க நிர்வாகிகள் சந்தித்து, இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும், சிறைபிடிக்கப்பட்ட படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# சஜித்தின் பாதுகாப்பை பலப்படுத்த கோரிக்கை

அதை விடுத்து ஜனநாயக விரோத செயல்களுக்கு இடமளிக்க கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும் தேர்தல் நெருங்கி வருவதால் எமது எதிர்க்கட்சித் தலைவரின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (14) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆளுநர்கள் சில சட்டவிரோதமாகப் பிரதிநிதிகளை நியமித்துள்ளனர். இந்த சட்ட விரோத நடவடிக்கைகள், நியமனங்களைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பிரதேச சபை, மாநகர சபை வளாகங்களுக்கு முன்னாள் உறுப்பினர்களை அனுமதிக்காதிருக்க வேண்டும். உள்ளூராட்சி மன்ற நிர்வாக நடவடிக்கைகளில் இவர்கள் தலையீடுகளை ஏற்படுத்த முடியாது.

இவர்கள் முன்னாள் உறுப்பினர்களாவர்.. எனவே அரசியல் நோக்கங்களுக்காக உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்களை ஆளுநர்கள் ஈடுபடுத்த வேண்டாம். இந்த சட்ட விரோத நடைமுறைகளைக் கைவிடுமாறு கோரிக்கை விடுக்கிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியால் குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என கூறியுள்ளோம். ஆனால் இதற்கு இந்நாட்டிலுள்ள சட்டங்கள் உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

# அனுரவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, என்றும் இல்லாதவாறு கூட்டங்களுக்குப் பைகளுடன் சமூகமளிப்பவர்கள் அழைக்கப்பட்டு விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கூட்டங்களுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

# “குத்தகை அடிப்படையில் மீன்பிடிக்க அனுமதி தேவை”

கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என மனு அளித்தனர்.

பாரம்பரிய கச்சதீவு பகுதியில் வாரத்தில் 3 நாட்கள் குத்தகை அடிப்படையில் மீன்பிடிக்க மத்திய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்தி அனுமதித்தால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2021 முதல் 2023 வரை 15 விசைப்படகுகள் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளன. ஒன்றரை ஆண்டுகளாக மீட்புக்குழுவினர் சென்று மீட்டு வர மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை. எனவே மீட்புக்குழுவினர் சென்று மீட்டு வர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்” என மனுவில் கூறப்பட்டுள்ளது

## யுவதியின் தலை முடியை கத்தரித்த...

கட்டுகஸ்தோட்டையில் இருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ்ஸில் யுவதியொருவர் அமர்ந்திருந்து பயணம் செய்துள்ளார். அவரது அந்த ஆசனத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த மௌலவி யுவதியின் தலைமுடியை வெட்டியுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தை எதிர்கொண்ட யுவதி, சந்தேகநபரையும், அவர் வெட்டிய தலைமுடியின் பகுதியையும் தனது அலைபேசியில் வீடியோவாக எடுத்துள்ளார். மேலும், மடவளை பிரதேசத்தில் வசிக்கும் யுவதி சில தேவைகளுக்காக கண்டி நோக்கி பயணித்த வேளையில் இச்சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளார். தனக்கு நேர்ந்ததை சக பயணிகளிடம் தெரிவித்ததை அடுத்தே, சந்தேக நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் முருத்தலாவ தெஹியங்க வடக்கு பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

# வடக்கு அரச ஊழியர்களுக்கு பிரதமர் தினேஷ் பாராட்டு

கடந்த சில நாட்களாக கொழும்பில் சில சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாண மக்கள் அவற்றில் இணையவில்லை. அதற்காக ஆளுநர், ஆசிரியர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் வழக்கம் போல் வேலைக்குச் சென்று, அன்றாடக் கடமைகளை நிறைவேற்றியுள்ளனர் என்றார்.

வட மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண நூலகத்திற்கும் இதன் போது நூல்கள் வழங்கிவைக்கப்பட்டன. இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர்-

“எங்கள் வாழ்நாளில் வரலாறு காணாத பொருளாதார மற்றும் நிதி நெருக்கடியை நாங்கள் எதிர்கொண்டோம். நிதி நெருக்கடியைச் சமாளிக்கும் பணிக்கும் சவாலுக்கும் ஜனாதிபதியும் பிரதமராகிய நானும் எதிர்கொண்டோம். நாட்டை முன்கொண்டு செல்வதற்குத் தேவையான அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குப் பல மக்கள் பிரதிநிதிகள் முக்கிய பங்கு வகித்தனர். நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பெரும் பலமாக இருந்தனர்.

அன்று நாங்கள் பட்ட கஷ்டங்கள் யாழ். ஊழியர்களுக்குத் தெரியும். அவர்கள் நெருக்கடியை படிப்படியாகத் தீர்க்க உதவினார்கள்.

கடந்த 24 மாதங்களில் பொருளாதார சவாலை வெற்றிகொள்ள நாட்டு மக்களிடம் இருந்து கிடைத்த ஆதரவின் காரணமாகச் சர்வதேச அளவில் இந்த நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டு சாதகமான வளர்ச்சியை அடைந்துள்ளோம். மேலும் அடைவுகளை நோக்கிப் பயணிக்க, நாம் ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பைப் பின்பற்ற வேண்டும்.

நாங்கள் ஒரு நியமனத்தை ஏற்றுக்கொள்ளும் போது, நாங்கள் ஒரு பொறுப்பை ஏற்றுக்கொள்கிறோம்.

அந்த வகையில் நமக்கு ஒரு கடமை இருக்கிறது. நமது உரிமைகளை நாம் கோர வேண்டும். ஆனால் அமைதியான முறையில் நமது உரிமைகளைப் பற்றிக் கலந்துரையாட முடியும் என்றார்.

# தமிழரசுக் கட்சி உயிர்போடு இருக்கிறது

தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தேர்தலை பிற்போட அரசாங்கம் சதி செய்கிறது என்றார்.

வவுனியாவில், ஞாயிற்றுக்கிழமை (14) இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும், கட்சி சம்பந்தமான வழக்கில் சம்மந்தப்பட்ட தரப்பினரும் ஒன்றாகக் கூடி அடுத்த தவணை 19 ஆம் திகதி வழக்கு வரவிருக்கின்ற காரணத்தினால் அது குறித்து உரையாடப்பட்டது.

நாங்கள் ஒவ்வொருவரும் தங்களது நிலைப்பாட்டுக்கு அமைய மறுமொழிகளைத் தாக்கல் செய்த பிறகு வழக்கை முடிவுறுத்துவதற்கான ஒரு யோசனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அந்த யோசனையின் விபரங்கள் நாங்கள் மத்திய செயற்குழுவில் கூடித் தீர்மானிப்போம். ஆனால் பொதுவாக வழக்கை எந்த அடிப்படையில் முடிவுறுத்தலாம் என இணங்கப்பட்டிருக்கிறது. முன்னேற்றகரமான செயற்பாடு கலந்துரையாடலில் இடம்பெற்றது. 8 எதிராளிகளையும் 19 ஆம் திகதி வழக்கில் அழைப்பார்கள். கடைசியாக இடையீட்டு மனுவை முன்வைத்த ஜீவராஜா என்பவருடைய இடையீட்டு மனு தொடர்பான விடயமும் 19 ஆம் திகதி இருக்கிறது.


அதனால் வழக்கு தள்ளிப் போகக் கூடிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். ஆனால் அதைத் தவிர நாங்கள் அனைவரும் மறுமொழி அனைத்து, இப்பொழுது குடியியல் நடவடிக்கைகள் சட்ட மூலத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின் அமைவாக வழக்கு விளக்கத்திற்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிபதியோடு ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் தான் வழக்கைச் சுமுகமாக தீர்க்கக் கூடிய வழிகள் என்ன என்பதை நீதிபதியோடு இணைந்து பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் சட்டப்படியாக இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ளது. 19 ஆம் திகதி மறுமொழி வழங்கிய பின்னர் ஒரு திகதியைத் தீர்மானித்துக் கலந்துரையாடலை மேற்கொண்டு வழக்கை என்ன மாதிரி முடிவுறுத்தலாம் என்ற தீர்மானத்திற்கு வரலாம். அதற்கு முன்னர் மத்திய செயற்குழு கூடி எடுக்கப் போகும் தீர்மானம் தொடர்பாகக் கலந்துரையாடி இணக்கப்பாட்டைத் தெரிவிக்கும்.

கட்சியின் தெரிவுகள். கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தெரிவுகள் நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஒரு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதனுடைய பிரதிபலன் என்னவென்றால் அதற்கு முன்னிருந்த தலைவர், செயலாளர், நிர்வாகிகள் கட்சியினுடைய செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. இலங்கை தமிழரசுக் கட்சி உயிர்ப்போடு இருப்பதுடன் ஒரு ஆக்கபூர்வமான பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பயணிக்கிறது. எதிர்வரும் எந்த தேர்தலில் கட்சி போட்டியிடும். மக்களுக்கான தனது செயற்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

பாராளுமன்ற குழுத் தலைவர் தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை.

அது தொடர்பில் எமது கட்சியின் அரசியல் குழு இணைய வழி ஊடாக ஒரு தடவை கலந்துரையாடியது. மத்திய செயற்குழுவில் அது சம்பந்தமான தீர்மானம் எடுப்போம் என்றார்.



# பிரதிவாதியை விடுவித்த மோசடியாளர் கைது

நீதவானின் கையொப்பத்தையும் போலியாக இட்டு, வழக்கு அறிக்கையையும் பெற்றுக்கொடுத்து, 35 இலட்சம் ரூபாயை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் ஞாயிற்றுக்கிழமை (14) காலை கைது செய்யப்பட்ட இந்த நபர், நீதிமன்றத்தின் முன்னாள் சேவையாளர் ஆவார்.

அவர், வெலிசர நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றியவர், இவ்வாறான தவறான மோசடிகளைச் செய்து வேலையிழந்து சிறையில் அடைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

தான் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் புதுக்கடை மேல் நீதிமன்றத்தில் தோலுக்கு முதலாளி என தெரிவித்தே இவ்வாறான மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

வென்னப்புவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட நபருக்கு எதிராக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், விமான பயணத்தடையை நீக்குவதற்காக, இவ்வாறு போலியான ஆவணங்கள், வழக்கு ஆவணங்களைத் தயாரித்து மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில், தனது போக்குவரத்து தடை நீக்கப்படாமை தொடர்பில், வென்னப்புவ பிரதேசத்தைச் சேர்ந்த நபர், நீர்கொழும்பு நீதிமன்றத்தின் பதிவாளரைச் சந்தித்து கேட்டறிந்துள்ளார்.

இதன்போது, தான் வைத்திருக்கும் வழக்கு ஆவணங்கள் போலியானவை என்றும், நீதவானின் கையொப்பமும் போலியானது என்பதும் கண்டறியப்பட்டது.

அதன்பின்னர் மேற்படி நபரைக் கைது செய்வதற்காக, நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக பிடியாணை பெற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், தன்னுடைய வதிவிடங்களை மாற்றிக்கொண்டே இருந்த மேற்படி நபர், பொலிஸில் சிக்கிக்கொள்ளாது இருந்துள்ளார்.

அவர், வத்தளை, ஹெந்தலை பிரதேசத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பில் தன்னுடைய மனைவியுடன் மறைந்து வாழ்ந்துள்ளார். அங்கிருந்து, ஞாயிற்றுக்கிழமை (14) காலை தப்பியோடுவதற்காக, தன்னுடைய பொருட்களை அடுக்குமாடியின் கீழ் தளத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

இவை தொடர்பில் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன் மனைவியையும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவ்விருவரையும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# “ரணில் விக்ரமசிங்க குழம்பியுள்ளார்”

ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது. எனவே, தேர்தல் நடத்தப்படுவது உறுதி. அத்தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றிபெற்று நாட்டின் ஜனாதிபதியாவார் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பதுளையில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்ற சந்திப்பின் பிறகு ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் இது தொடர்பில் வே.இராதாகிருஷ்ணன் கூறியதாவது,

“ஜனாதிபதி தேர்தல் தொடர்பான அறிவித்தலை விடுப்பதற்குரிய அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிட்டுவதற்கு இன்னும் ஓரிரு நாட்களே உள்ளன. இந்நிலையில் தேர்தலை பிற்போடுவதற்கு சிலர் நீதிமன்றத்தை நாடுகின்றனர். 5 ஆண்டுகளா, 6 ஆண்டுகளா எனக்கோரி ஒருவர் நீதிமன்றத்தை நாடினார். அந்த மனு நிராகரிக்கப்பட்டது. 19 ஆவது திருத்தச்சட்டம் முறையாக நிறைவேற்றப்படவில்லை என கூறி மற்றுமொருவர் நீதிமன்றத்தை நாடியுள்ளார். உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டலுடன்தான் 19 நிறைவேற்றப்பட்டது. எனவே, இது விடயத்தில் சிக்கல் வராது.

எனவே, ஒக்டோபர் மாதம் தேர்தல் நடைபெறுவது உறுதி. ஜனாதிபதி தேர்தலுக்கென பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, நிதி இல்லை என காரணம் கூறவும் முடியாது.



ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாமல் ஆக்கித் தனி ஒருவராக பாராளுமன்றம் வந்து, ஜனாதிபதியாகத் தெரிவானமை ஜனாதிபதி ரணிலின் திறமை. ஆனால், ஜனாதிபதி தேர்தலில் எந்த அணியில் போட்டியிடுவது என்ற குழம்பியுள்ளார்.

ஏனெனில், மக்கள் ஆணை அவருக்கு இல்லை.

அதேபோல, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி தனிக்கட்சி உருவாக்கி எதிர்க்கட்சி தலைவராக சஜித் பதவிவகிக்கின்றார். அவருக்கான வெற்றி வாய்ப்பே அதிகம். எனவே, தற்போதைய சூழ்நிலையில் சஜித் பக்கம் இருந்து சிலர், ஜனாதிபதியுடன் இணையவுள்ளனர் எனக் கூறப்படுவதெல்லாம் சாத்தியமற்ற விடயமாகும்” என்றார்.

இச்சந்திப்பில், மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் சங்கரன் விஜயசந்திரன், பிரதி தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம், மலையக தொழிலாளர் முன்னணி செயலாளர் புஷ்பா விஸ்வநாதன், பதுளை மாவட்ட அமைப்பாளர் பசீர் பாலசந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.


# தாய்லாந்துக்கு இலவச விசா

விசா இல்லாமல் இலங்கைக்கு வருவதற்கு ஏற்கெனவே இலங்கை அனுமதி வழங்கியுள்ளது.

தாய்லாந்தின் உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, விசா அனுமதி பெற்ற நாடுகளிலிருந்து வரும் பயணிகள் 30 முதல் 60 நாட்கள் வரை நாட்டில் தங்கலாம். எவ்வாறாயினும், அனைத்து பயணிகளிடமும் பணம், தங்குமிடம் மற்றும் திரும்புவதற்கு/ டிக்கெட்டுகளுக்கான சான்றுகள் இருக்க வேண்டும்.

இந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் சுற்றுலாப் பயணிகளாகவோ அல்லது குறுகிய கால வணிக நோக்கங்களுக்காகவோ வரவேற்கப்படுவார்கள் .

மேலும், தாய்லாந்தில் இளங்கலைப் பட்டம் அல்லது அதற்கு மேல் பட்டம் பெறும் மாணவர்கள், பட்டப்படிப்புக்குப் பிறகு ஒரு வருடம் தங்கி வேலை தேட, தாய்லாந்திற்குள் பயணம் செய்ய அல்லது ஆராய்ச்சி போன்ற பிற தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ள தாய்லாந்து அனுமதிக்கிறது.




## அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம்

# ஜூலையில் 24% மாக, உயர்ந்துள்ளது

நாட்டின் போக்கை பற்றி நம்பிக்கையுடன் சிந்திக்கும் மக்களின் எண்ணிக்கை 2023 ஜூன் இல் இருந்ததை விட அதிகமாக உள்ளது என வெரிட்டேரிசர்ச்சின் 2024 ஜூலைக்குரிய 'தேசத்தின்மனநிலை' கருத்துக்கணிப்பின் முடிவுகள் கூறுகின்றன.

வெரிட்டே ரிசர்ச்சின் கேலப் பாணியிலான (Gallup style) சமீபத்திய 'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பின்படி, நான்கு மாதங்களுக்கு முன்பு இருந்ததை விட அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதோடு, பொருளாதாரம் மற்றும் நாட்டின் பொருளாதாரப் போக்கு பற்றி மக்கள் நம்பிக்கையாக உணர்கிறார்கள்.

2024 பெப்ரவரியில் 7% ஆக இருந்த அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரத்தின் மதிப்பீடு, ஜூலை மாதத்தில் 24% ஆக அதாவது மூன்று மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது. தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்துப் பதிலளித்தவர்களில், 28% மக்கள் அது நல்லது அல்லது சிறந்தது என்று தெரிவித்துள்ளனர், இது 2024 பெப்ரவரியில் காணப்பட்ட 9 வீதத்தில் இருந்து மூன்று மடங்கு அதிகரிப்பைக் குறித்துநிற்கிறது. நாட்டின் பொருளாதார நிலைமைகள் சிறப்பான பாதையில் சென்று கொண்டிருக்கின்றன என்று நம்பும் மக்களின் பங்கும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. பதிலளித்தவர்களில் 30% பேர் இந்தக் கருத்தைக் கொண்டிருந்ததோடு, இது 2024 பெப்ரவரியில் 9% ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.

### 1.அரசாங்கம் மீதான மக்களின்அங்கீகாரம்/24%

"தற்போதைய அரசாங்கம் செயற்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா அல்லது மறுக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 24% பேர் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளனர். (பிழை வரம்பு- 2.73%). 2023 ஜூன் இல் 21% ஆக இருந்த அரசாங்கம் மீதான மக்களின் அங்கீகாரத்தை விட இது அதிகமாக வேகாணப்படுகின்றது.

### 2.பொருளாதார நிலைமைகள் பற்றியமதிப்பீடு/நல்லது அல்லது சிறந்தது: 28%

"நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளை சிறப்பு, நன்று அல்லது மோசம்" என மதிப்பிடுமாறு கேட்டபோது, 28% மக்கள் அது நல்லது அல்லது சிறந்தது என்று கூறியுள்ளனர் (பிழை வரம்பு- 2.87%).இது 2023 ஜூன் மாதத்திலும் 27% ஆக, அதாவது கிட்டத்தட்ட சமமான மதிப்பீட்டையேகொண்டிருந்தது.

### 3.பொருளாதாரக் கண்ணோட்டம் / மேம்பட்டு வருகின்றது: 30%

"ஒட்டுமொத்தமாக நாட்டின் பொருளாதார நிலைமைகள் மேம்பட்டு வருகின்றதா அல்லது மோசமடைந்து செல்கின்றதா?" என்ற கேள்விக்குப் பதிலளித்தவர்களில்,30% பேர் பொருளாதாரம் மேம்பட்டுவருவதாக நம்புகின்றனர் (பிழை வரம்பு- 2.91%).இது 2023 ஜூன் மாதத்திலும் 29% ஆக, கிட்டத்தட்டச் சமமான மதிப்பீட்டையே கொண்டிருந்தது.

கருத்துக்கணிப்பை நடைமுறைப்படுத்தல்

வழக்கமாக நடத்தப்படும் இக்கருத்துக் கணிப்பு வெரிட்டே ரிசர்ச்சின் Syndicated சர்வேஸ் செயற்கருவியின் ஒரு பகுதியாகும். வாக்களிப்பு பங்காளராக வென்கார்ட் சர்வே (பிரைவட்) லிமிடட் (Vanguard Survey (Pvt) Ltd) செயற்படுகிறது. இச்செயற்கருவி இலங்கையர்களின் உணர்வுகளை ஆய்வு செய்வதற்கான வாய்ப்பை ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்குகிறது.

நாடளாவிய ரீதியில் தனித்தனி குடும்பங்களில் இருந்து வயது வந்த இலங்கையர்கள் 1,038 பேரைக் கொண்ட பல்கட்ட சம வாய்ப்புபதில் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, 2024 ஜூன் 28 முதல் ஜூலை 06ஆம் திகதி வரை இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இக்கருத்துக் கணிப்பு 95% நம்பிக்கை இடைவெளியில் -3.04% அதிகபட்ச மாதிரி பிழை வரம்பைக் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. செயற்படுத்தும் செயன்முறையில் ஏற்படக்கூடிய குறைபாடுகளால் இப்பிழை வரம்புகள் மேலும் பாதிக்கப்படலாம்.

# "பொருத்தமான வேட்பாளர் இல்லை"

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வற்புறுத்தவுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா, உடுகம்பொல பிரதேசத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் மத்தியில் சனிக்கிழமை (13) உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை முன்வைப்பது குறித்து தமது கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை.

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குப் பொருத்தமான நபர் தமது கட்சியில் இல்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு நன்றியுள்ள ஒரு நபராக அவரது வெற்றிக்காக தன்னை அர்ப்பணிப்பதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.





# "அச்சுறுத்தும் தோட்ட நிர்வாகம்"

■ துவாரகஷான்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1,700 ரூபாய் சம்பளம் இதுவரை கிடைக்காத காரணத்தினால் உடனடியாக சம்பளத்தை வழங்க வேண்டும் என கோரியும் இதற்கு ஒத்துழைப்பு வழங்காத கம்பெனிகள் வெளியேறுமாறு கோரியும் ஞாயிற்றுக்கிழமை (14) காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை தலவாக்கலை- நானுஓயா தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்

இதன்போது 80க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், "அரசாங்கம் 1,700 ரூபாய் வழங்க வேண்டும். அத்துடன், இதுவரை கம்பெனிகள் இதனை வழங்கவில்லை தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு தொழில் செய்தும் எங்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத்தை வழங்க முடியாத நிலையில் இருக்கின்ற கம்பெனிகள் உடனடியாக வெளியேறுமாறும் தாங்கள் படும் கஷ்டங்கள் தொடர்பாகவும் எவரும் ஏறெடுத்து பார்ப்பதில்லை " எனவும் அவர்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

மேலும், ஆர்ப்பாட்டங்கள் நடத்தினாலும், தோட்ட நிர்வாகம் அதனை நடத்த வேண்டாம் என அச்சுறுத்துவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# தூபிக்குள் பூஜை செய்த ஐவர் கைது

■ ரஸீன் ரஸ்மின்

கருவலகஸ்வெவ, எகொடபிட்டிய பிரதேசத்தில் ஆயிரம் வருடங்கள் பழைமையான தூபியொன்றுக்குள் விளக்கு ஏற்றி பூஜை செய்து புதையல் தோண்டுவதற்கு முயற்சி செய்த ஐவர் சனிக்கிழமை (13) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கருவலகஸ்வெவ பொலிஸ் உத்தியோகத்தர்களும், வனவிலங்கு அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 40, 50, 52, 56 வயதுடைய நவகத்தேகம, கொபேய்கனே, நிகவெரட்டிய மற்றும் வாரியபொல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இந்த சுற்றிவளைப்பின் போது, 65 வயதுக்கு மேற்பட்ட சந்தேக நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

அந்த இடத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள், விளக்கு உட்பட பூஜை பொருட்களுடன், நூல், சந்தனக்குச்சி, தூபம், அலவாங்கு, மண்வெட்டி போன்ற பொருட்களுடன் கடல் மணலும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பாரிய விபத்தால் தொலைபேசி சேவைகள் துண்டிப்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

கல்முனை பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியாருக்கு சொந்தமான எரிபொருள் கொள்கலன் ஒன்று, ஞாயிற்றுக்கிழமை(14) அதிகாலை 3.30 மணியளவில் புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் சிக்கிய எரிபொருள் கொள்கலனின் முன் பகுதி பலத்த சேதமடைந்துள்ளதுடன், வீதியோரமிருந்த தனியார் வளாகத்தின் மதில்ப் பகுதியும் சேதத்துக்குள்ளாகி , இலங்கை ரெலிக்கொம் தொலைத்தொடர்பு வலையமைப்பின் தூண்களும் உடைந்துள்ளது.

இதனால் குறித்த பிரதேச தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மிதி பலகையில் இருந்து விழுந்த பயணி மரணம்

■ சுமணசிறி குணதிலக்க

மொனராகலை - வெல்லவாய வீதியில் தனியார் பேருந்தில் பயணித்த பயணியொருவர் மஹகொடயாய பிரதேசத்தில் வைத்து பேருந்தின் மிதி பலகையில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் வெள்ளிக்கிழமை (12) இடம்பெற்றுள்ளது.

தம்பகல்ல-அலேகோன பகுதியைச் சேர்ந்த, மூன்று பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய டி.எம்.ஜயதிலக என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வெற்றிலையைத் துப்புவதற்காகப் பேருந்தின் பின் புறமுள்ள மிதி பலகைக்கு சென்றபோது கீழே விழுந்துள்ளார்.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த அவர் மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என புத்தள பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 'நாய்பட்டிமுனை' பெயர் மாற்றப்பட்டது

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவில் கல்முனை பிரதான அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள 'நாய்பட்டிமுனை' உப அஞ்சல் அலுவலகம், 2024.04.02 அன்று தொடக்கம் 'நற்பிட்டிமுனை' உப தபாற் கந்தோர் என்று பெயராக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது.|

இவ்விடயம் தொடர்பில் அஞ்சல் அலுவலக உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு நற்பிட்டிமுனை அனைத்து பள்ளிவாசல் தலைவர் ஜெ.எம் றிஸான் (ஹாமி) உட்பட நிர்வாகிகள் கொண்டு வந்ததை தொடர்ந்து 2024.05.31 திகதி வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக குறித்த பெயர் மாற்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

இதன்படி, குறித்த உப தபாற் கந்தோரின் பழைய விளம்பர பலகை அஞ்சல் மா அதிபர் எஸ்.ஆர். டபிள்யூ.எம்.ஆர்.பி.சத்குமாரவின் பணிப்புரைக்கு அமைய அகற்றப்பட்டு புதிய விளம்பலகை தற்போது பொருத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இனிவரும் காலங்களில் நற்பிட்டிமுனை உப தபாற் கந்தோர் என அழைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.







# மாமியாரை தாக்கிய மருமகள் கைது

■ பு.கஜிந்தன்



யாழ்ப்பாணம்-கொடிகாமத்தில் வயோதிபப் பெண்ணான மாமியாரைத் தாக்கிய மருமகள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கொடிகாமம்-மந்துவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீட்டில் வயோதிபப் பெண்ணான மாமியார் மீது மருமகள் நடத்திய தாக்குதல் தொடர்பிலான காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் கவனம் செலுத்திய நிலையில், பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து விசாரணைகளை ஆரம்பித்த கொடிகாமம் பொலிஸார், தாக்குதல் நடத்திய பெண்ணை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை நடத்தி வருகின்றதுடன், விசாரணைகளுக்குப் பின்னர் குறித்த பெண்ணை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ‘கைக்கு எட்டியது, வாய்க்கு எட்டவில்லை’

குடுகுடுப்பைக் காரர்கள் பற்றி பலரும் கேள்விப்பட்டிருப்போம், ஊர் ஊராகச் சென்று, கை சோதிடம் ஜக்கம்மா அருள்வாக்கு சொல்லிக் குறி சொல்தல், கோடாங்கி சொல்தல், அருள் வாக்களித்தல், குடுகுடுப்பை சொல்தல், கைரேகை சோதிடம் பார்த்தல், மாந்திரீகம் செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவார்கள்.

தங்களுடைய குடும்பத்துடன், ஊர்விட்டு ஊர் பெயர்ந்து, சிறிய கூடாரங்களை அமைத்து, குறிப்பிட்ட நாட்களுக்கு அங்கேயே தங்கியிருந்து, குறிசொல்வார்கள். அந்த குழுவைச் சேர்ந்தவர்களில் பெண்கள், தங்களுடைய பிள்ளைகளையும் அழைத்துச் சென்று குறி சொல்லச் சென்று விடுவர். ஆண்கள், அந்த கூடாரத்துக்குள் இருந்து, ஓட்டையாகி இருக்கும் ஈய பாத்திரங்களுக்கு ஈயம் ஊற்றிச் சரிசெய்து கொடுப்பர்.

அந்த ஊரில் இனிமேலும் தங்கியிருக்க முடியாதென அறிந்து விட்டால், மற்றுமோர் ஊருக்கு குடும்பமாகப் படையெடுத்து விடுவர். இவர்களிடம், மருத்துவ குணங்களைக் கொண்ட, அரிய வகையான மருந்துப் பொருட்களும் இருக்கும், சில மிருகங்களின் உறுப்புகளையும் வைத்திருப்பர். அவற்றின் ஊடாகவே மந்திரங்களைச் செய்வதாகவும் முன்னோர் கூறியிருக்கின்றனர்.

இந்த குடுகுடுப்பைக் காரர்கள் பெரும்பாலும், பெருந்தோட்டங்களிலேயே தங்கியிருப்பர். வீடுவீடாகச் சென்று சாத்திரம் கூறி விட்டு, ஒரு சுண்டு அரிசி கேட்பர், குறைவாகக் கொடுத்து விட்டால் திட்டி விடுவர். இதனால், பெருந்தோட்ட பெண்களுக்கும், குடுகுடுப்பைக் காரிகளுக்கும் இடையில் வாய்ச் சண்டை ஏற்பட்டுவிடும். அப்போது, பெருந்தோட்ட பெண்களைப் பார்த்து, “ நீ ஊருக்கு உழைக்கும் முண்டம்” என திட்டி விடுவர்.

தற்போதைய நிலைமையை பார்க்குமிடத்து, குடுகுடுப்பைக் காரிகள் சொல்லியது சரியாகத்தான் இருக்கிறது என்று நினைக்கத் தோன்றுகின்றது. அந்தளவுக்கு பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் இருக்கிறது. அன்றாட சம்பளத்தை அதிகரித்துக்கொள்ள முடியாமல் பொருளாதார ரீதியில் கடுமையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

வர்த்தமானியின் ஊடாக நாளாந்த சம்பளம் 1,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டாலும், சில கம்பனிகளை அவற்றை வழங்காது, நீதிமன்றம் சென்றன. இதனால், அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒருசில கம்பனிகள், அறிவிப்பு விடுக்கப்பட்ட உடனேயே, தொழிலாளர்களுக்கான சம்பளத்தை அதிகரித்துக் கொடுத்துவிட்டன.

சம்பளம் அதிகரிப்பு வெளியானதன் பின்னர் பட்டாசு கொளுத்தப்பட்ட ஆரவாரம் செய்யப்பட்டது. எனினும், இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர், மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு இடையில் கடுமையான சொற்போர்கள் இடம்பெற்றன. ஏற்கெனவே, வலியுறுத்தியதைப் போல, தொழிற்சங்க, அரசியல் ஆகியவற்றை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு, தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக ஓரணியில் நிற்கவேண்டும்.

ஒற்றுமையை இழந்துவிட்டதால் ஒவ்வொன்றுக்கும் கையேந்த வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. ஒரு நாள் வேலைக்குப் போகாவிட்டால், அந்த நாளுக்கு உரிய சம்பளம் கிடைக்காது. ஆகையால், சம்பளத்தைப் பெறவேண்டுமாயின் வேலைக்குச் செல்லவேண்டும். இல்லையேல் மாத இறுதியில் திண்டாடவே வேண்டும். நாளாந்த சம்பளம் அதிகரிக்கப்பட்டு, கிடைத்துவிட்டது. எனினும், அது வாய்க்கு எட்டவில்லை என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும் போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், ‘நான்’ என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது, குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கழிதங்கள்

### முதலைகள் இறந்து கரையொதுங்குகிறது

அம்பாறை-காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிப்பள்ளி பாலம் அருகில் அண்மைக்காலமாக முதலைகள் பல இறந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் இப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் அப்பகுதியினால் பொதுமக்கள் சிரமத்துடன் பயணம் செய்வதை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பாலத்தை அண்டிய பகுதிகளில் சுமார் 30க்கு அதிகமான முதலைகள் காணப்பட்ட போதிலும் தற்போது 10 முதல் 15 வரையிலான முதலைகளே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த பாலத்தைச் சுற்றி சட்டவிரோதமாகக் குப்பைகளும் கொட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு முதலைகள் இறந்த நிலையில் காணப்படுவதால் பிரதேச மக்கள் அசௌகரியத்திற்கு முகங்கொடுத்து வருவதாகவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- பாறுக் ஷிஹான்



# ஜனநாயக முயற்சிகளுக்கு வெற்றி

– லக்ஸ்மன்

போராட்டங்களால் வெற்றிகள் எட்டப்படுவது ஜனநாயகம் மறுக்கப்படாத நாடுகளிலும், ஜனநாயக ரீதியாக முடிவுகளை எடுக்கக்கூடிய தலைவர்கள் உள்ள இடங்களிலுமே நடைபெறும். இலங்கையைப் பொறுத்தவரையில் 2,000 நாட்களைத் தாண்டிய போராட்டம். 300 நாட்களைக் கடந்த போராட்டம் 4 மாதங்களை எட்டியுள்ள போராட்டம் என பல போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. தற்போதும் புதிது புதிதாகப் போராட்டங்கள் ஆரம்பித்துக்கொண்டும் இருக்கின்றன. நடைபெறும் போராட்டங்களுக்கு முடிவும், போராட்டங்கள் தோற்றம் பெறாத நிலையும் எப்போது நாட்டில் உருவாகும் என்பது யாருக்கும் தெரியாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

அதேபோன்ற ஒன்றே கிழக்கு மாகாணத்தில் கால்நடைகளின் மேய்ச்சலுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை ஆக்கிரமித்து விவசாயம் செய்யும் மக்களை அப்புறப்படுத்தக் கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டமாகும். 10 மாதங்களாகியும் தீர்வு வழங்கப்படாததால் அப்பகுதி பால் பண்ணையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வினை பெற்றுத்தருமாறு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் பாற்பண்ணையாளர்களின் போராட்டம் ஜூலை 09ஆம் திகதி 300 நாட்களைப் பூர்த்தி செய்த நிலையில், ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட மயிலத்தமடு மாதவனை பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன், தமது வாழ்வாதாரம் தற்போது முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் போராட்டம் இல்லாமல் எந்த வெற்றியையும் அடைய முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

“300 நாட்களுக்குப் பின்னரும், எங்கள் மேய்ச்சல் நிலங்கள் கிடைக்கும் வரை நாங்கள் போராடுவோம். தொடர்ந்து போராடினால்தான் பலன் கிடைக்கும். சிங்களக் குடியேற்றங்கள் வருவதற்கு முன் ஒரு நாளைக்கு 6,000 லீட்டர் பால் கொடுத்தோம். இப்போது 500 லீட்டர் பால்தான் கிடைக்கிறது. மாடுகள் இறக்கின்றன. வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 100 லீட்டர் பால் கறந்தவர் இன்று ஐந்து லீட்டர் பால்தான் கறக்கின்றார்” என குறிப்பிட்டுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பால் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக, உள்ளூர் மத தலைவர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் தமது ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர். கடந்த 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குழுக் கூட்டத்தில் தீர்வை வழங்க முடியாதுள்ளதாக மாவட்டச் செயலாளர் கமலாவதி பத்மராஜா தெரிவித்ததை அடுத்து, 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சித்தாண்டி சந்திக்கு அருகில் பால் பண்ணையாளர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதற்கு முன்னரும் சிறு சிறு போராட்டங்களை நடத்தியிருந்த பண்ணையாளர்கள் இப்போராட்டத்தினையும் அவ்வாறே நடத்திவிட்டுக் கைவிட்டுவிடுவர் என்று எதிர்பார்த்தபோதும் இப்போராட்டம் முடிவின்றித் தொடர்ந்து வருகின்றமை வருத்தத்துக்குரியதாகும்.

தமது மாடுகளை மேய்ச்சலுக்குப் பயன்படுத்திய சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஏக்கர் காணி அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பான்மைச் சிங்கள விவசாயிகளால் பயிர்ச்செய்கைக்காக கையகப்படுத்தப்பட்டதாகவும், தாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளபோதிலும் மேலும் பல ஏக்கர் காணிகளை அவர்கள் கையகப்படுத்தியுள்ளதாகவும் பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவணை பிரதேசத்தில் உள்ள கால்நடை வளர்ப்புக்கான மேய்ச்சல் தரை நிலம், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினால்ல் ஆளுநராக நியமிக்கப்பட்ட, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால், சோளம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் வகையில், குடியேற்றப்பட்ட 150 சிங்களக் குடும்பங்களுக்கும் பிரதேச பால் பண்ணையாளர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படத் தொடங்கின. ஏற்கெனவே யுத்தம் நடைபெற்று முடிந்த காலப்பகுதியில் இருந்தே இப்பிரதேசத்தில் குடியேற, காணிகளைக் கையகப்படுத்தும் எண்ணத்துடன் செயற்பட்டுவந்த இவர்கள் நிரந்தரமாகக் குடியேறும் செயற்பாட்டினை முன்னெடுத்திருந்தனர். இதனையடுத்து, பௌத்த விகாரை அமைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

யுத்தம் முடிவுற்ற காலத்தில் அத்துமீறி பயிர்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு அவர்கள் மேற்கொண்ட பயிர்களின் விளைச்சல் காலத்தின் பின்னர் இவ் மேய்ச்சல் தரைப் பிரதேசத்திலிருந்து வெளியேறவேண்டும் என அன்றைய கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணான்டோ பணிப்புரை விடுத்திருந்தார். அன்றைய காலத்தில் கூட முழுமையாக வெளியேறியிருக்கவில்லை. ஆதற்கு அதிகாரிகளினதும் பாதுகாப்பும் தரப்பினரதும் கரிசனையின்மை காரணமாகும்.

கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்ட 6,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தில், சிங்கள விவசாயிகள் 2,500 ஏக்கர் நிலப்பரப்பை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளதாகவும், இது புல் வளரக்கூடிய வளமான பூமியெனவும் பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

300 நாட்கள் தொடர் போராட்டத்தின் போது சிங்கள விவசாயிகள் மேய்ச்சல் நிலங்களில் தாம் மேற்கொண்டுள்ள பயிர்ச் செய்கைகளுக்காகக் களைக்கொல்லிகளை வீசியதாலும், மேய்ச்சல் நிலங்களுக்கு தீ வைப்பதாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் உணவின்றி உயிரிழந்துள்ளன. அத்துடன், பொறிகள், வெடிகள் மூலமும் கால்நடைகள் கொல்லப்பட்டு வருகின்றன என்று மயிலத்தமடு, மாதவனை பால் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

“மேய்ச்சல் தரையை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தப் போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 1,075 மாடுகள் உயிரிழந்துள்ளன. சட்டவிரோதமாக குடியேறியவர்களின் ஆயுதங்களால் 375 மாடுகள் பலியாகியுள்ளன. இதுவரை இந்த இறப்புகளுக்கான இழப்பீடு எதுவும் கிடைக்கவில்லை. “மேய்ச்சல் நிலத்தில் 160 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் அத்துமீறி வாழ்ந்து வருவதாகவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதே நேரத்தில், பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதாக நாட்டின் தலைவரும் அரச அதிகாரிகளும் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. “ஜனாதிபதியும், மகாவலி அபிவிருத்தி அமைச்சரும் சந்தித்து வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாவட்டச் செயலாளர் அரசாங்கத்தின் வாக்குறுதியை நம்புங்கள் என்கிறார். மொத்த நிலத்தில் 10,000 ஹெக்டேயரை மேய்ச்சலுக்குக் கேட்டிருந்தோம். அதன் பின்னர் குறைந்தது 7,000 ஹெக்டேயரைக் கேட்டோம். ஆனால், மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் 3,000 ஹெக்டேயர் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை” என்றும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், பால் பண்ணை பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகக் கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொலிஸாருக்கும் மகாவலி அதிகாரசபை அதிகாரிகளுக்கும், பால் பண்ணையாளர்களின் நிலத்தை அபகரித்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை வெளியேற்ற சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார். மயிலத்தமடு - மாதவனையில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச காணியில், அத்துமீறிக் குடியேறியதாகத் தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அரச அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் எவ்வகையான ஆவணமும், அத்துமீறிக் குடியேறியவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால், மயிலத்தமடு, மாதவனை பகுதியில் அத்துமீறிக் குடியேறிய 13 பேரையும் வெளியேற்றுமாறு நீதவான் கட்டளை பிறப்பித்தார். எவ்வாறெனினும் சிங்கள விவசாயிகள் இதுவரை நிலத்தை விட்டு வெளியேறவில்லை. ஆங்கு அத்துமீறிக் குடியேறியிருப்பவர்களை முழுமையாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் இம்மாத ஆரம்பத்தில் மயிலத்தமடு, மாதவனை பிரதேசத்திற்கு கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

பண்ணையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முகமாக மேற்கொள்ளப்பட்ட விஜயத்தில், மாவட்டத்தின் எல்லையோர பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் இதன் போது அரசாங்க அதிபரினால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரையில் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை என்பதே யதார்த்தம்.

எது எவ்வாறானாலும், மகாவலி அதிகாரசபையுடன் கலந்துரையாடுவதும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் உறுதிமொழி பெறுவதும் ஜனாதிபதி பணிப்புரை விடுப்பதும் பயனற்றதே. அத்துமீறி விவசாயத்தில் ஈடுபடும் குடியேறும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாதவரையில் இதனை முடித்துவைக்கவே முடியாது என்பதுவே நிச்சயமானது.

300 நாட்களைக் கடந்து நடைபெற்று வருகின்ற பண்ணையாளர்களின் போராட்டம் ஒருவருடம் கடப்பதற்குள்ளாவது தீர்வை எட்டட்டும் என்று பிரார்த்திப்போம்.



# Star Garments குரூப் Togoக்கு விஸ்தரிப்பு

Star Garments குரூப், Togo இல் பாரியளவிலான ஆடை ஏற்றுமதி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை நிறுவி, அதனூடாக மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கான ஆடை மற்றும் ஆடை உற்பத்தி ஆற்றலை மேம்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இதற்காக உலக வங்கி குரூப்பின் அங்கத்துவ அமைப்பான சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்திடமிருந்து (IFC) 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறித்துள்ளது.

இந்தத் திட்டத்தினூடாக, இலங்கைக்கு அப்பால் நிறுவப்படும் Star இன் முதலாவது உற்பத்தி தொழிற்சாலையாக இது அமைந்திருக்கும். Togo இல் ஆயிரக் கணக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு இந்தத் திட்டம் எதிர்பார்ப்பதுடன், அதனூடாக பல்தேசிய விநியோகத்தராக உலக வரைபடத்தில் Star முக்கிய இடம் ஏற்படுத்தப்படும். Togo இல் காணப்படும் முதலாவது பாரியளவிலான ஆடை உற்பத்தி வசதியாக Star இன் இந்தத் தொழிற்சாலை அமைந்திருக்கும்.

Togo இன் Lom நகரை அண்மித்து காணப்படும் Plateforme Industrielle d'Adtikop தொழிற்பேட்டை பகுதியில் பசுமைவெளி ஆடைத் தொழிற்சாலையை Star நிறுவும். அதனூடாக 4,520 நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். குறிப்பாக பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். அதனூடாக 2030ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி சார் பெறுமதி சேர்ப்பில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை பெற்றுக் கொடுக்கும். Star இன் தொழிற்சாலை, Lomஇன் உயர் பெறுமதி வாய்ந்த தொழிற்துறை தொடர்களில் அங்கம் பெறும்.

IFC இனால் வழங்கப்படவுள்ள 15 மில்லியன் அமெரிக்க டொலர்களில் 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நேரடியாகவும், எஞ்சிய 7.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள், சர்வதேச அபிவிருத்தி சம்மேளன தனியார் துறை இடைவெளி இணைந்த நிதி வசதியின் ஆதரவினூடாகவும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இலங்கையின் ஆடைத் தொழிற்துறையில் நான்கு தசாப்த காலப்பகுதிக்கு மேலான அனுபவத்துடன் Star ஜாம்பவானாகத் திகழ்கின்றது. 9,000 க்கும் அதிகமான ஊழியர்களை கொண்டு இயங்குகின்றது. நிலைபேறாண்மையில் சம்பியனாக பரந்தளவில் Star அறியப்படுவதுடன், அதன் எட்டு தொழிற்சாலைகள் LEED-சான்றிதழைப் பெற்றுள்ளதுடன், உலகின் முதலாவது passive house தொழிற்சாலையையும் கொண்டுள்ளது. Starஇன் Togoவில் நிறுவப்படவுள்ள தொழிற்சாலையும் LEED நியமங்களின் பிரகாரம் அமைக்கப்படும். ஆடைத் தொழிற்துறையைச் சேர்ந்த நிறுவனங்களில் சகல செயன்முறைகளிலும் காபன் நடுநிலைக்கான சான்றிதழைப் பெற்ற ஒரே குழும ஆடை உற்பத்தி நிறுவனமாகவும் Star குரூப் திகழ்கின்றது.

Star Garments குரூப் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.சுகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில், “எமது உற்பத்தி பகுதியை தொடர்ச்சியாக பன்முகப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துவதுடன், Togoஇல் நிறுவப்படவுள்ள எமது புதிய தொழிற்சாலை, எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு செலவு போட்டிகரத்தன்மை வாய்ந்த மாற்றுத் தெரிவாக அமைந்திருக்கும். உலகத்தரம் வாய்ந்த ஆடை உற்பத்தியை மேற்கு ஆபிரிக்க பிராந்தியத்துக்கு கொண்டுவந்து, சர்வதேச ரீதியில் எமது வளர்ச்சிக்கு மேலும் பக்கபலமாக அமைந்திருக்கும்” என்றார்.

மேற்கு ஆபிரிக்காவின் ஆடை மற்றும் ஆடைத் தொழிற்துறை வளர்ச்சிக்கான பெருமளவு வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. இப்பிராந்தியத்தில் பெருமளவு இளம் திறமைசாலிகள் காணப்படுகின்றனர். இந்தத் துறைக்கு உகந்த வகையில் அண்மைக் காலங்களில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பாக, துறைமுகங்கள் நிர்மாணம் மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் ஸ்தாபிப்பு போன்றவற்றை குறிப்பிடலாம். மேற்கு ஆபிரிக்காவில் ஒன்றிணைக்கப்பட்ட பிராந்திய ஆடை பெறுமதி சங்கிலியை கட்டியெழுப்புவது மற்றும் உற்பத்தி ஆற்றல்களை மேம்படுத்துவது போன்றவற்றில் கவனம் செலுத்தி மேற்கு ஆபிரிக்காவில் IFC இனால் முன்னெடுக்கப்பட்ட Cotton-to-textiles Value Chain Study இன் பெறுபேறாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. 2024 ஜூன் மாதமளவில், Togo இல் 131 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடுகளை IFC கொண்டுள்ளதுடன், அவை விவசாயம், போக்குவரத்து, சரக்குக் கையாளல், நிதி, வலு, டிஜிட்டல், வீடமைப்பு முற்றும் சுகாதாரம் போன்றவற்றை அணுகல் போன்றவற்றில் முதலிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி சூழல் விருதுகள்–2024

# Lumalaக்கு வெண்கல விருது





பரந்த சர்வதேச நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலுக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பை கௌரவிக்கும் வகையில், இலங்கையர் மத்தியில் செயற்திறனான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் வகையில், Lumala என அறியப்படும் City Cycle Industries Manufacturing பிரைவட் லிமிடெட், முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி சூழல் விருதுகள் 2024இல் சூழல் பிரிவில் சிறந்த தனியார் நிறுவனத்துக்கான வெண்கல விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு, வருடத்தில் பெருமளவு எதிர்பார்ப்புகளைக் கொண்ட நிகழ்வாக அமைந்திருப்பதுடன், நாட்டின் சிறந்த நிலைபேறாண்மை சம்பியன்களை கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது. சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சூழல் அதிகார சபையினால் (CEA) ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் பங்கேற்புடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர, வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி மற்றும் இராஜதந்திர சமூகத்தின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நான்கு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக சைக்கிள்கள் மற்றும் e-bikeகள் ஏற்றுமதிக்காக புகழ்பெற்ற நிறுவனமாக Lumala திகழ்கின்றது. ஸ்மார்ட் போக்குவரத்து தீர்வில் கொண்டுள்ள தலைமைத்துவம் அதனை கொண்டுள்ளது. தாக்கத்தை ஏற்படுத்தும் புத்தாக்கமான செயற்பாடுகளினூடாக, அதன் ஒழுக்கமான மற்றும் சூழலுக்கு நட்பான நிலைபேறான உற்பத்தி செயன்முறைகளுக்கு தொழிற்துறையில் பெருமளவு கீர்த்தி நாமத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் கழிவு முகாமைத்துவத்தில் காணப்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட Eco Hauler e-bike cart குறிப்பிடத்தக்க தீர்வாக அமைந்துள்ளது.









# அம்பானி திருமண விழாவில் பங்கேற்ற பிரபலங்கள்


மும்பையில் உள்ள ஜியோ உலக மாநாட்டு மையத்தில் பிரம்மாண்ட ஏற்பாடுகளுடன் நடந்த தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானி - ராதிகா மெர்சண்ட் திருமண விழாவில் பிரபலங்கள் பங்கேற்றனர்.


இலங்கையில் இருந்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது மனைவியுடன் சென்றிருந்தார். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர், மஹேல ஜயவர்தனவும் தன்னுடைய மனைவியுடன் சென்றிருந்தார்.

















கலபுர்கி

அமெரிக்காவில் இதுபோன்ற

# வன்முறைகளுக்கு இடமில்லை

## ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு தொடர்பில் ஜோ பைடன் கண்டனம்

குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிடும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைத்தளத்தில், "பென்சில்வேனியாவில் டொனால்ட் ட்ரம்பின் பேரணியில் நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து எனக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. அவர் பாதுகாப்பாகவும் சிறப்பாகவும் இருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்ட நான், நன்றியுள்ளவனாக இருக்கிறேன். மேலும், இந்த தகவலுக்காக நாங்கள் காத்திருக்கும்போது, அவருக்காகவும் அவரது குடும்பத்தினருக்காகவும், பேரணியில் இருந்த அனைவருக்காகவும் நான் பிரார்த்தனை செய்தேன்.

அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றதற்காக நானும், ஜில் பைடனும் இரகசிய சேவைக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அமெரிக்காவில் இதுபோன்ற வன்முறைகளுக்கு இடமில்லை. அதைக் கண்டிக்க ஒரே தேசமாக நாம் ஒன்றுபட வேண்டும்" என்று ஜோ பைடன் பதிவிட்டுள்ளார்.

ரோம்

# இந்திய கொத்தடிமைகள் இத்தாலியில் மீட்பு

இத்தாலி பண்ணைகளில் கொத்தடிமைகளாக பணியாற்றி வந்த இந்திய தொழிலாளர்கள் 33 பேரை இத்தாலி பொலிஸார் சனிக்கிழமை (13) மீட்டுள்ளனர். கொத்தடிமைகளாக ஈடுபடுத்திய இருவரிடமிருந்து இந்திய மதிப்பில் சுமார் ரூ.4.5 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கொத்தடிமைகளாக பணியாற்றி வந்த இந்திய தொழிலாளர்கள் வாரத்தில் 7 நாட்கள், நாள் ஒன்றுக்கு 10 முதல் 12 மணி நேரம் வரையில் பணியாற்றி வந்துள்ளனர்.




இவர்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு இந்திய மதிப்பில் ரூ.360 கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

ரூ.15 இலட்சம் செலுத்தினால் இத்தாலியில் சிறப்பான எதிர்காலம் அமைத்து தருவதாக கூறி இவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ட்ராபெர்ரி பழத்தோட்டத்தில் பணியாற்றிய 31 வயதான இந்திய தொழிலாளியின் கை இயந்திரத்தில் சிக்கி பலியானத்தை அடுத்தே கொத்தடிமை விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது.

# மோடி கண்டனம்



குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிடும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இந்தியப் பிரதமர் மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பதிவிட்டுள்ளதாவது, "எனது நண்பரும், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிமான டொனால்ட் ட்ரம்ப் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலையடைந்தேன். இந்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறேன். அரசியலிலும் ஜனநாயகத்திலும் வன்முறைக்கு இடமில்லை. அவர் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன் என பதிவிட்டுள்ளார்.



கண்ணூர்

# தங்க நாணயங்களால் பெண்களுக்கு இன்ப அதிர்ச்சி

கேரள மாநிலத்தில் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதற்காக தோண்டப்பட்ட குழியில் இருந்து 300-க்கும் மேற்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் கிடைத்துள்ள சம்பவம் அப்பகுதி பெண்களிடையே இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைப்பதற்கான குழியை தோண்டும் பணியில் சில பெண்கள் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மண்ணுக்கடியில் இருந்து மர்ம பொருள் ஒன்று கிடைத்துள்ளது. இதனால் அது வெடிகுண்டாக இருக்கலாம் எனவும், அல்லது மாந்திரீகம் செய்யப்பட்ட பொருளாக இருக்கலாம் எனவும் அச்சம் நிலவியதால் அதனை பெண்கள் தூக்கி வீசியுள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக அந்தப் பெட்டி உடைந்து அதற்குள் இருந்து தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் சிதறுவதை கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

அதில் 17 முத்துகள், 13 தங்க நாணயங்கள், காதணிகள், மோதிரங்கள் மற்றும் வெள்ளி நாணயங்கள் என 345 பொருட்கள் இருப்பது தெரியவந்தது.



கலபுர்கி

# இறந்த பொறியாளருக்கு இடமாற்றம்

இளநிலைப் பொறியாளராக பணியாற்றி கடந்த ஜனவரி 12ஆம் திகதி உயிரிழந்து, 6 மாதங்களான பொறியாளரை இடமாற்றம் செய்து கர்நாடகா நகர்ப்புற வளர்ச்சித்துறை ஜூலை 9ஆம் திகதி உத்தரவிட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான உத்தரவு சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அத்துடன், கர்நாடகா அரசிற்கு பலர் கண்டனமும் தெரிவித்து வருகின்றனர். இளநிலை பொறியாளர் இறந்தமை குறித்து எந்த தகவலும் மாநில அரசுக்கு தெரியவில்லையா? அப்படியானால் இந்த ஆறு மாத சம்பளமும் அவர் கணக்கில் வரவு வைக்கப்படுமா என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய

# மாணவிகள் மாகாண மட்டத்துக்குத் தெரிவு

■ *நூருல் ஹுதா உமர்க*

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் இம்முறை நடைபெற்ற வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 வெற்றி இடங்களை தனதாக்கி மாகாணப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் கல்வியிலும், விளையாட்டு, கலை, இலக்கிய போட்டிகளிலும் பிரகாசிக்கும் இந்த பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் மாகாண மற்றும் தேசிய அளவில் பிரகாசித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம்.றிபாஸ் ,விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம்.ஆபாக் ஆகியோர்களின் பயிற்சியின் பயனாக இந்த அடைவுகள் கிடைத்துள்ளதாகவும் அந்த மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு சிறப்பான முறையில் தயார் படுத்திய பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இணைப்பாடவிதான த்திற்கு பொறுப்பான உதவி அதிபர் எம்.எம். ஹாத்திம் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தெரிவித்துள்ளார்.









கோபா அமெரிக்கா

# கால்பந்து இறுதிப்போட்டி

## அர்ஜென்டினா–கொலம்பியா மோதுகின்றன

48ஆவது கோபா அமெரிக்கா கால்பந்து போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் மியாமி நகரில் நடக்கும் இறுதி ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா, முன்னாள் சாம்பியன் கொலம்பியாவை எதிர்கொள்கிறது.

இந்த போட்டித் தொடரில் 30ஆவது முறையாக இறுதிப்போட்டியை எட்டியுள்ள அர்ஜென்டினா அணி 16ஆவது முறையாக கோப்பையை வெல்ல குறிவைத்துள்ளது.

அதே நேரத்தில் 2001ஆம் ஆண்டுக்கு பிறகு முதல்முறையாக இறுதிப்போட்டிக்குள் அடியெடுத்து வைத்திருக்கும் கொலம்பியா 2ஆவது முறையாக கோப்பையை கைப்பற்றும் முனைப்புடன் இருக்கிறது.

எனவே, இந்த ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது. இந்த ஆட்டம் உள்ளூர் நேரப்படி ஞாயிற்றுக்கிழமை (14) இரவு நடைபெற்றது.

# வெள்ளை பந்து சுற்றில் திருத்தம்

இலங்கையில் நடைபெறவிருக்கும், இலங்கையின் வெள்ளை பந்து சுற்றுப்பயணத்தின் அட்டவணை திருத்தப்பட்டுள்ளது, போட்டி ஜூலை 27ஆம் திகதி ஆரம்பமாகும் என இலங்கை கிரிக்கெட்(எஸ்எல்சி) சனிக்கிழமை (13) தெரிவித்துள்ளது.

இந்திய அணிக்கு எதிரான டி-20 போட்டிகள், கண்டி- பல்லேகலவில், ஜூலை 27, ஜூலை 28 மற்றும் ஜூலை 30 ஆகிய திகதிகளில் நடைபெறும். அதன்பின்னர், கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில், ஓகஸ்ட், 2,4 மற்றும் 7ஆம் திகதிகளில் ஒருநாள் போட்டிகள் மூன்று இடம்பெறும்.





# கோட்ட விளையாட்டு போட்டிகள்

■ *நடராசா கிருஸ்ணகுமார்*

கிளிநொச்சி-கரைச்சி கல்விக் கோட்ட விளையாட்டு போட்டிகள், கரைச்சி கல்விக் கோட்டப் பணிப்பாளர் சு.தர்மரட்ணம் தலைமையில் கிளிநொச்சி றொட்ரிக்கோ மைதானத்தில் சனிக்கிழமை (12) நடைபெற்றன.

42 பாடசாலைகள் பங்கு கொண்ட இப்போட்டியில், 1ஏ, பி, சி தர பாடசாலைகளில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி முதலாம் இடத்தினையும் தரம் ii பாடசாலைகளில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயமும் முதல் இடங்களை பெற்றுக்கொண்டன.

பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டியில் அனைத்து பிரிவிலும் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டது.



விம்பிள்டன் சாம்பியன்

# பட்டம் வென்றார் பர்போரா

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டனில் மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார் பர்போரா கிரெச்சிகோவா. இது அவர் வென்றுள்ள இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம்.

செக் குடியரசு வீராங்கனையான பர்போரா கிரெச்சிகோவா (வயது 28 ), சனிக்கிழமை (13) அன்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இறுதி ஆட்டத்தில் இத்தாலியின் ஜாஸ்மின் பவ்லினியை 6-2, 2-6, 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 15 ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.